
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | மே 1992 | இதழ் 5



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. கிறிஸ்தவம் பிரிவினையற்றது சிதறல்களின் ஒட்டல்ல 1—7

2. அப்போஸ்தலர்களின் பலவீனமும், பலமும் 8—12

8. சபையில் பெண்கள் ஆற்ற வேண்டிய பணிகள் எத்தகையது? 13—16

4. திரும்பிச் செல்வோம் வாரீர்! 17—27

5. கிறிஸ்தவத்துக்கு உடனடித் தேவை ஒற்றுமை 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

❋ ❋ ❋

Published by Church of Christ

Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 5. May—1992 Issue 5

**ஆசிரியவுரை**

## கிறிஸ்தவம் பிரிவினையற்றது-சித்றல்களின் ஒட்டல்ல

## Christianity is undenominational-Not inter denominational

''கார் ஒன்று இந்தப் பக்கமாக வந்ததா? பதட்டமாகக் கேட்டார் முதியவர் ஒருவர். பதில் வரவில்லை மாறாக அங்கிருந்து கேள்விகள் தான் வந்தன. காரா? என்ன கார்? மாருதியா? அம்பாஸிடரா? பியட்டா?-இது இளைஞன் ஒருவனின் கேள்விக் கணைகள். ''அதெல்லாம் இல்லை, கார் அவ்வளவுதான்'' சற்று எரிச்சலுடன் சொன்னார் பெரியவர்.

''என்னையா கோபப்படுகிறீர்? என்ன கார் என்று சொல்லாமல் கார், கார் என்றால் என்ன பதில்சொல்வது? எத்தனையோ ரகமான கார்கள் வருகின்றன, போகின்றன. என்ன கார் என்று சொன்னால்தானே சரியாகப் பதில் தரமுடியும்? ''இது இளைஞரின் சமாதான விளக்கம்.

இருவருமே தங்கள் தங்கள் சூழ்நிலையில் நியாயமாகத்தான் நடந்து கொண்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. முதல் முதலில் கார்கள் மார்க்கெட்டுக்கு வந்தபோது எல்லாக் கார்களும், ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. அந்நாட்களில் கார் என்றால் போதும் மக்கள் புரிந்து கொள்வார்கள். இன்று அப்படியல்ல;

தற்காலத்தில் புதிய புதிய கம்பெனிகள் புதுப்புது ரகமான கார்களை உற்பத்தி செய்து மார்கெட்டுக்குள் விடுகின்றனர். ஆகவே இளைஞன் பதில் கொடுக்க முடியாமல் தடுமாறினான். அது அவனுடைய குற்றமன்று.

கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இதுவே நிலைமை. அன்றொரு நாள், நடுத்தர வயது உள்ளவர், பார்த்தால் படித்து உத்தியோகம் பார்ப்பவர் போல் தோற்றம். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டார்.

நான் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என்று மரியாதையாகத் தான் சொன்னேன். அவருக்கு கொஞ்சம் வருத்தம். அதைக் காட்டிக் கொள்ளாமல் அதுசரி ஐயா, எந்த ஐக்கியம் என்று தான் கேட்டேன் என்றார். ஐக்கியம் அது இது எல்லாம் இல்லை. கிறிஸ்துவின் சபை, அவ்வளவுதான் என்றேன். அப்படியானால் நாங்கள் எல்லாம் சாத்தான் சபைகளா? என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் பல சபைகளைப் பற்றி பிரஸ்தாபம் கிடையாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களிடையேயும் வேற்றுமை கிடையாது. ஒரே சபை. (எபே 4:4) கிறிஸ்துவின் சுவிஷேசத்துக்கு கீழ்படிந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள். (அப் 11:26.)

ஆனால் அந்த நிலை மாறி வீதிக்கொரு சபை ஆளுக்கொரு உபதேசம் என்ற நிலை வந்து விட்டது. ஆகவேதான் அந்த மனிதர் கோபப்பட்டுக் கொண்டார். அது தற்காலத்தில் வாழுகின்ற நம்முடைய குற்றமன்று ஏனெனில் நாம் இந்த பிரிவினை வாதத்தை உருவாக்கவில்லை. பல சபைகள் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கிற காலத்தில் நாம் பிறந்திருக்கிறோம். பிரிவினை வாதத்தை நாம் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பூர்வீக சொத்தாக பெற்றுக் கொண்டிருக்கிறோம். விரும்புகிறோமோ, இல்லையோ நாம் தோன்றுவதகு முன்னரே பல சபைகள் என்ற நிலை நன்கு வேர்விட்டு தழைத்து நிற்கிறது. அதன் நிழலில் நாம் அண்டிக் கொண்டிருக்கிறோம். தந்தையும், தாத்தாவும் ஏற்றுக்கொண்டனர். நாமும் பின்பற்றுகிறோம்.

இப்படிப்பட்ட காரணங்களால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே சபை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது சற்றுக் கடினமாகத் தோன்றுகிறது. இருப்பினும் முயன்று உண்மையைக் கண்டு பிடிப்போம் ஏனெனில் எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் படியும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து

பார்க்கும்படியும் நமக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது. (1 தெச 5:21; யோவான்5:39; அப் 17:1).

இரட்சிக்கப் பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். அப் 2;47. **எந்த சபையில்?** சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று அப் 8:3ல் வாசிக்கிறோம் **எந்த சபையை?** எப்படி கார் கண்டுபிடித்த நாட்களில் கார் என்றால் மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்களோ அவ்வாறே சபை என்று வேதம் குறிப்பிடும்போது ஒரே சபையைத்தான் குறிப்பிடுகிறது என்று கொள்ள வேண்டும். இயேசு ''என் சபையைக் கட்டுவேன்'' என்று ஒருமையில் தான் சொன்னார் (மத் 16:18.) அதாவது நான் ''கிறிஸ்தவத்தை ஸ்தாபித்தேன்'' என்றார், இயேசு சபையில் அன்பு கூர்ந்து . . . . . . தம்மைத்தாமே அதற்கு ஒப்புக்கொடுத்தார் "என்று வாசிக்கிறோம். (பே 5;25-27) வேதாகமத்தில் சபை என்றால் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள். உதாரணமாக இஸ்ரவேலரை ''சபை'' என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஏனெனில் தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துக் கொண்டார். (அப்7;38) சவுல் சபையைத் துன்புறுத்தினான் என்று சொல்லும்போது சபையிலுள்ள ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தினான் என்றே பொருள். (அப் 8:1-3) சபை என்பது ஆகுபெயர்; சபையிலுள்ள மக்களையே குறிக்கும். கட்டிடத்தைக் குறிக்காது சபை என்பது தேவனுடைய ஆவிக்குறிய மாளிகை. அது ஜீவனுள்ள கற்களால் ஆனாது 1 பேதுரு 2:5 ஆகவே சபை என்றால் கிறிஸ்தவர்களையே குறிக்கும்.

மேலும் அப்போஸ்தலன் பவுல் அப்:20:28ல் கூறும்போது இயேசு தம்முடைய இரத்தத்தை விலைக் கிரயமாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்று குறிப்பிடுகிறார். ஆகவேயார் எல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்திஞல் வாங்கப்பட்டிருக்கிருர்களோ அவர்கள் எல்லாம் சபையில் அங்கங்களாக, இருக்கிறார்கள். ஆகவே இயேசுவின் இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட அழைக்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்வதவர்களே இப்படி தேவன் அழைக்கப்பட்ட மக்களை, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துக்குட்படுத்தியிருக்கிறார். (கொலோ 1;13) (சபைக்கு இன்னொரு பெயர் இராஜ்ஜியம் என்று அறிக) எவ்வாறுஒரு குழந்தை பிறந்தால் தன்னுடைய தகப்பனாருடைய குடும்பத்துக்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிறதோ அதே போன்று மக்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும்போது கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். யோவான் 3:3,5 சபைக்கு இன்னும் ஒரு பெயர் கிறிஸ்துவின் சரீரம். (கொலோ 1;18)

மக்கள் ஆவியானவரின் உபதேசங்களைக் கேட்டு (வேத வசனங்களை) அவருடைய சரீரமாகிய சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். (1 கொரி 12:13) வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள்-குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இராஜ்ஜியத்தின் பிரஜைகளாகிறார்கள் என்று பொருள் எந்த சபை என்ற பிரச்சனைக்கே இடம் இல்லை. ஏனெ-வேதாகமத்தில் சபை என்பது ஒன்றுதான். ஆனால் இன்றைய உலகில் பல சபைகள் அவதாரம் எடுப்பதற்கு யார் காரணம்? ஒன்றாக இருந்த சபை இப்படி சின்னாபின்னமானது எப்படி? அதற்கு வேதாகமமே பதில் கூறுகிறது. வாசித்துப்பார்ப்போம்.

**1. விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்:-** *1 தீமோ*

விசுவாசம் என்பதை ஆங்கிலவேதாகமம் "The faith" என்று குறிப்பிடுகிறது. (அப் 6:7; 13:8;14:22 கலா 1;23.) அதாவது விசுவாசம் என்பது ஒருமை (எபே 4:5)

**2 சுவிசேஷத்தைப் புரட்டுவார்கள்:-** *கலா 1:7*

சுவிசேஷப்புரட்டு அபாயகரமானது ஏனெனில் சுவிஷேசமே கிறிஸ்தவத்தின் இதயம். இதயத்துக்கு கேடுவந்தால்சரீரத்துக்கு ஆபத்து. அப்படிப்பட்ட புரட்டில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும், வானத்தில் இருந்து வந்த தேவதூதனாலும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. கலா 1;8,9) ஏனெனில் கிறிஸ்தவம் மாசுபடாமல் காக்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தம்.

**3. ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்:-** *2 தீமோ 4:3*

ஜென்ம சுபாவமுள்ள மாந்தர்களின் எண்ணம் தேவசித்தத்துச்கு எதிர்திசையில் இயங்கும் தன்மையுள்ளது. (கலா 5:17) ஆகவே தேவ ஆலோசனைகள் பல மனிதர்களுக்கு பிடிக்காது. அதனால் தேவன் அவர்கள் பொய்யை விசுவாசிக்கும் ஆவியை அவர்களுக்குள் அனுப்புவார். (2 தெச 2:10-12.)

இப்படியாக மனிதர்கள் தூய கிறிஸ்தவத்தின் தன்மையைக் கறைபடுத்தி கட்டுக்கதைகளை விரும்பி ஏற்றுக்கொண்டார்கள்.

**4. கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குவார்கள்:-**

அப்போஸ்தலன் பவுல் ரோம் நகரில் உள்ள சபையாருக்கு ''சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்கிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டும்''

என்று புத்தி சொல்லுகிறார். (ரோமர் 16:17.) அப்போஸ்தலன் யோவான் கூட, ''கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன், ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால் அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். (2 யோ 9-11) இருந்தபோதிலும் தற்காலத்தில் மனிதர்கள் கிறிஸ்துவின் தூயஉபதேசத்தை உதறித்தள்ளிவிட்டு தங்கள் மனம்போல் நடக்கின்றனர்.

**5. முதலாம் நூற்றாண்டு சபைக்குள் மாம்ச சிந்தையுள்ள மனிதர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டு வந்து புகுத்தினர் :-**

பவுல் கொரிந்து சபையாருக்கு கருத்து ஒருமித்தவர்களாகவும் பிரிவினையற்றவர்களாகவும் ஒருமனமும் ஒரு சிந்தையுள்ளவர்களாக சீர்பொருந்தியிருக்க வேண்டும். என்று புத்தி சொல்லுகிறார்; (1:10.) ஆனால் பிரிவினைமார்க்கம் உருவானதே இங்கேதான் என்று எண்ணும்படி, நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் தனித்தனி முத்திரை குத்திக்கொண்டு போர்க்கோலம் பூண்டனர். (1 கொரி 1;12) இந்தப்பிரிவினை வாதம். இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவரைத் தொழுகிற மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை அர்த்தமற்றதாக்கிவிட்டது. (யோவான்17:20,21.) அப்போஸ்தலன் பவுல், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ளவேண்டும் என்று உருக்கமாய்வேண்டுகோள் விடுகிறார். ''ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரேதேவன்'' என்பதை விளக்கி பிரிவினை பாவம் என்று சொல்லாமல் சொல்லுகிறார். (எபே 4:3-7.) அவர் வேண்டுகோளும் இன்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

**6: இறுதியாக சபையை விட்டே விலகினார்கள்:**

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் மனிதரையே கடித்த கதையாக, முதலில் விசுவாசத்தை விட்டுவிலகிய மனிதன் கொஞ்சம் கொஞ்சமாய் சுவிசேஷத்தை, சத்தியத்தை, கொள்கையை, ஐக்கியத்தை விட்டுவிலகி இறுதியாக சபையை விட்டே விலகினர். (அப் 20:28-30)

எபேசு பட்டணத்து மூப்பர்கள் தங்களையும், தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த மந்தையாகிய சபையையும் கண்காணிக்கும்

படி எச்சரிக்கப்படுகின்றனர். இந்த மந்தை கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது. என்று கூறப்பட்டுள்ளது. (வ 28) இந்த மூப்பர்கள் எபேசுப் பட்டணத்தில் இருந்த சபையை, மேய்ப்பர்கள் மந்தையைக் காப்பதுபோல் காக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். ஏனெனில் ''மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் உங்களில் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.'' (வ 29,30) எச்சரித்திருந்தார். எப்படி ஓநாய்களால் மந்தை சிதறடிக்கப்படுமோ அவ்வாறு கள்ளப் போதகர்களால் சபையும் சிதறடிக்கப்படும். இந்த சண்டாளர்கள் கிறிஸ்து தம் விலை மதியாத இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த சபையை சின்னாபின்னப்படுத்தி கிறிஸ்துவின் சபையைக் கூறுபோட்டு மகிழ்ந்தனர்.

தூர்போன மண்சட்டி நாளுக்கு நாள் மேலும், மேலும் விரிசல் அடைவது போல் அன்று விதைக்கப்பட்ட பிரிவினை வாதம் என்ற நச்சுச்செடி, பிரிவினை மார்க்கங்களாக வளர்ந்து பெருகி இன்றைக்கு எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்து மறைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாத தற்காலத்துக்கிறிஸ்தவர்கள் இந்த பிரிவினை மார்க்கங்களையும், குழுமங்களையும் கிறிஸ்துவின் சபைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இது குருடர்கள் யானையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கதையைத்தான் நினைவூட்டுகிறது ஆனால் சபை வரலாற்றைப் படிக்கும் போது கிறிஸ்தவத்தில் இன்று நிலவும் பிரிவினைகளால் உண்மைக் கிறிஸ்தவத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற தலைக்குனிவை அறிந்து வேதனைப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன?

1. யூதா நிருபம் மூன்றாம் வசனம் கூறுகிற வண்ணம் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டும். அந்த ஒரே விசுவாசம் மீட்கப்பட்டு, விலகிப் போனதற்கு முன்பு இருந்த நிலைமைக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

2. தடம்புரண்டு கிடக்கிற கிறிஸ்தவ மார்க்கம் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.

3. மாந்த ஞானத்தால் கறைபடாத சத்தியம் போதிக்கப்பட வேண்டும்.

4. கள்ளப் போதகங்களின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்பட வேண்டும்.

5. ஆரோக்கியமான உபதேசங்கள் பறை சாற்றப்பட வேண்டும்

6. பிரிவினையைத் தகர்த்து ஐக்கியத்தை (Unity Not Union) உருவாக்க வேண்டும்.

7. அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டு ஆதியில் நிறுவப்பட்ட ஒரே சபையை மீட்டு அமைக்கவேண்டும்.

சுருக்கிக் கூறின் **முதலாம் நூற்றாண்டில் இருந்த தூய புதிய ஏற்பாட்டுச்சபை** மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய, நம்முடைய பிதாவும் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒன்றாயிருந்து, வேதம் விளம்புவதை விவரித்துக் கூறுவோம். வேதம் விளம்பாதவைகளுக்கு உடன்படவே மாட்டோம் என்று சூளுரைத்துச் செயல்பட வேண்டும். தயாரா?

**E. Z. செல்வநாயகம்**

## இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்

## சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேளுங்கள்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.

# அப்போஸ்தலர்களின் பலவீனமும், பலமும்

சிலவேளைகளில் நம்முடைய நிலைக்காகப் பரிதபிக்கிறோம் நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமலிருப்பதற்குப் பல சாக்குப் போக்குகளைச் சொல்லுகிறோம். அந்த அளவுக்கு நாங்கள் பல-வீனமானவர்கள் என்றும் பாவிகள், என்றும் அதனால் தேவன் நம்மை மன்னிக்கவே மாட்டார் என்றும் வாதம் செய்கிறோம், கர்த்தர் யாருக்காக மரித்தார்? **''பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்'' என்று அவரே சொல்லியிருக்கிறாரே (மாற் 2:1)**

நாம் எல்லோரும் அறிந்திருக்கிற பிரகாரம் இயேசுகிறிஸ்து பாவமில்லாதவர், பரிசுத்தமுடையவர், பரிபூரணமுள்ளவர். பவுல் அப்போஸ்தலர் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும்போது ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' என்றும் (2கொரி 5:21) எபிரேய நிருப ஆசிரியர் ''நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாது பிரதான ஆசிரியர் நமக்கிராமல் எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கிறவரும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசிரியரே நமக்கிருக்கிறார்'' (எபி4:5,16) என்றும். ''அவர் பாவஞ் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை'' என்று பேதுரும் 2:22) சொல்லியிருக்கிறார்கள். அவருக்கடுத்தப்படியாக யாரை நாம் பரிசுத்தமானவர்கள் என்று சொல்லலாம்? வேறு யாரையுமே சொல்லமுடியாது, அவரால் தெரிந்து கொள்ளப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்ட அப்போஸ்தலர்களையே கூடச் சொல்ல முடியவில்லை.

இயேசுகிறிஸ்து இந்த பூவுலகில் வாழ்ந்த நாட்களில் தமக்குப் பின் தான் விட்டுச் சொல்லுகிற பணியைச் செய்ய வேண்டும் என்பதற்காக பனிரெண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டு சுமார் மூன்று ஆண்டு காலம் பயிற்சி கொடுத்தார். ஆயினும் அவர்கள் உன்னதத்திலிருந்து வல்லமையையும், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பு, தவறு செய்யும் இயல்புள்ளவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்று வேதம் நமக்குக் கூறுகிறது.

முதலாவது யூதாஸ்காரியோத்து என்பவனை எடுத்துக் கொள்வோம். அவன் தெரிந்து கொள்ளப்பட்ட பனிரெண்டு பேரில் ஒருவனாக இருந்தான் (மாற்கு 2:17) அவன் தான் பொருளாளர்

பணியை ஏற்றுக் கொண்டு பண வரவு செலவு செய்து வந்தான். (யோவான் 12:6,13:29)பொருளாதாரக்காரனாக இருந்திருப்பான் அவர் ஒரு கருமி என்று நினைப்பதற்கு இடம் இருக்கிறது.

ஏனெனில் கடைசி இராப் போஜனத்தின் போது இயேசு கிறிஸ்து முன் கூட்டியே தெரிவித்து இருந்தும் கூட ஈவிரக்கமில்லாமல், காசுக்காக ஆசைப்பட்டுக் காட்டிக் கொடுத்தான் (மத் 26:21-25:48-50) பின்னர் அதற்காக வருத்தப்பட்டு நான்று கொண்டு செத்தான் (மத் 27:3-5)

இரண்டாவதாக பேதுரு, ஆண்டவரை மூன்று தரம் மறுதலிக்கிறான். இவன் தான் எந்த சூழ்நிலையாலும் தன்னை ஆண்டவரிடமிருந்து பிரிக்க முடியாது என்றும் அவருக்காக தான் உயிரை விடுவதற்கும் தயங்க மாட்டேன் என்றும் சவால் விட்ட பொழுது இயேசு அவன் தன்னை மூன்று முறை இந்த இராத்திரியிலே, மறுதலிப்பான் என்றும் சொல்லியிருந்தார். (யோவான் 13:26,36) அதே போல நடந்தேறியது. இப்படி நடைபெற்ற பிறகு, பேதுரு ஆண்டவர் சொன்ன ''சேவல் இரண்டு தரம் கூவுவதற்கு முன் நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்று சொன்னபோது நினைவு கூர்ந்து வெளியில் சென்று வெட்கப்பட்டு வேதனையோடு அழுதான் (மத் 26 : 69 - 75) ஆனால் பேதுரு மறுதலித்ததற்காக, மனஸ்தாபப்பட்டார். பிற்காலத்தில் அவர் சபையை நிறுவுவதற்கு, பரலோகத்தின் திறவுகோலைப் பெற்றுக் கொண்டார். அவரும் மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தே கொஸ்தே பிழைகளின்போது சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்தனர். (அப் 2) பின்னர் புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்தினார். (2 : 10, 11 ஆதி) அவர் எழுதிய இரண்டு நிருபங்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. பேதுரு தவறு இழைத்திருந்த போதிலும்; மனந்திரும்பி கர்த்தருடைய சேவையில் ஊக்கமாக ஈடுபட்டார்.

மூன்றாவது தோமா - இவர் இயேசுவின் உயிர்த்தெழுதலையே சந்தேகித்தவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு ''மறுபடியும் எட்டு நாட்களுக்குப் பிறகு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று, உங்களுக்கு சமாதானம் என்றார். பின்பு, அவர் தோமாவை நோக்கி - நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார். உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிஸ்வாஸியாயிராமல் விசுவாசியாயிரு'' என்றார்.

''தோமா அதற்குப் பிரதிசித்தமாக என் ஆண்டவரே, என் தேவனே என்றான். அதற்கு இயேசு, ''தோமாவே, நீ என்னைக்

கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். (யோவான் 20:26-29).

இதன் கருத்தை சரியாகப் புரிந்து கொள்வதற்கு தோமா என்ன சொல்லியிருந்தான் என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியம். ''இயேசு வந்திருந்த போது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே கூட இருக்கவில்லை. ''மற்ற சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன் ''அவருடைய கைகளில் ஆணிகளாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்தில் என் விரலை விட்டு, என் கையை அவருடைய விலாவிட்டு போட்டால் ஒழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான்:

(யோவான் 20 ; 24, 25) ஆகவே இயேசு அவன் விரும்பியபடியே செய்ய அனுமதித்து அவன் சந்தேகங்களைப் போக்கினார். அதனால் தோமாவுக்கு சந்தேகப் பேர்வழி'' என்ற பெயர் நிலைத்து விட்டது. ஆனால் அவருடைய பிற்கால வாழ்க்கையில் ஆண்டவருக்காக பெரும் காரியங்களைச் செய்தார் என்று தோன்றுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுப்படி அவர் இந்தியாவுக்கு வந்து மேற்குக் கடற்கரைப் பகுதியில் சுவிசேஷத்தை அறிவித்து அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினார் என்றும் பின்னர் அப்படியே கிழக்குக் கடற்கரையோரப்பகுதிக்கு வந்து சென்னைக்கு அருகாமையில் சுவிசேஷம் அறிவிக்கிற வேளையில் அவனைக் கொடிய ஆயுதங்களால் தாக்கி கொன்று விட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

நான்காவதாக பவுல் சவுலாக இருந்த காலத்தில் இயேசுவையும் அவருடைய தொண்டர்களையும், சபையையும் விரோதித்துத் துன்புறுத்தி மிகுந்த தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவர் குணப்பட்டு மாறின பிறகு இயேசுவை உயிர்த்தெழுந்த நாதர் என்று வல்லமையாய்ப் பிரசங்கித்தார். (அப் 9) மூன்று மிஷினரில் பயணங்களை மேற்கொண்டு ரோம சாம்ராஜ்யமும் எங்கும் சபைகளை ஏற்படுத்துகிறார். பல நிருபங்களை எழுதி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை உற்சாகப் படுத்துகிறார். தன்னைப் பிரதான பாவி என்று மனத்தாழ்மையோடு அறிக்கையிட்டார். (1 தீமோ 1 : 5) தன்னைப் போன்ற ஒரு பயங்கரமான பாவியைக் கர்த்தர் மன்னித்து அவனுடைய பாவங்களைப் போக்கி ஏற்றுக்கொண்டானென்றால் உலகில் யார் வேண்டுமானாலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அவர்களை யெல்லாம் ஏற்றுக் கொண்டு ஆதரிப்பார் என்பது நிச்சயம் என்று

தெரிகிறதல்லவா ? பவுல் பின்னர் இயேசுவுக்கு இருந்த சாட்சி-யாக மரித்தார் என்று வரலாறு கூறுகிறது. மற்ற அப்போஸ்தலர்களுக்கும் இதே போன்ற சாதக போதகங்கள் இருந்தன. ஆனால் முடிவு வரை தங்கள் விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாய் நிலைத்து நின்று கர்த்தருக்காக எழுந்து நின்று போராடினார்கள். யோவான் ஒருவரைத் தவிர மற்ற எல்லாருமே இயேசுவின் பகை-வர்களால் துன்புறுத்தப்பட்டு மரணத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்று தெரிகிறது.

யோவான் ஒருவரைத் தவிர மற்ற எல்லாருமே இயேசுவின் பகைவர்களால் துன்புறுத்தப்பட்டு மரணத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று தெரிகிறது.

இயேசுவினால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களே பாவிகளாகவும், அழைக்கப்பட்ட பிறகும் கூட தவறு இழைப்பவர்களாகவும் இருந்திருக்கிறர்கள் என்றும், அவர்கள் மனந்திரும்பின பொழுது மன்னிக்கப்பட்டுக் கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால் உன்னையும், என்னையும் இரட்சிப்பது எவ்வளவு நிச்சயம்? அவரைச் சிலுவையில் அறைவதற்கு உடன்பட்டிருந்த ஒரு சிலரே கூட சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட பொழுது அதைக் கேட்டு இருதயத்திலே குத்துண்டு, கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றால் நானும், நீயும் இரட்சிக்கப்படுவதற்கு ஏதுதடை? (அப்: 2)

ஒருவன் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் கூட இடறுவதற்கு வாய்ப்புண்டு என்று யோவான் கூறுகிறார். ' அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

நமக்குள் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்; சத்தியம் நமக்குள் இராது

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்

நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது (யோவான் 1:1-20

இந்த வாழ்க்கையில் தாங்கள் செய்கிற பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பாமல், பாவத்திலேயே மாண்டு

போனவர்களைத் தவிர மன்னிக்கப்பட முடியாதவர்கள் ஒருவருமே இல்லை ஒருவனுக்குள் உயிர் இருக்கும் வரை அவன் மனம் திரும்பக் கூடிய வாய்ப்பும் கிறிஸ்துவுக்குக் கீழ்படியும் வாய்ப்பும் உண்டு (அப் 2:38)

அதற்கென்று கடைசி நேரத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று காலத்தைத் தள்ளிப்போட வேண்டாம் இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்'' என்று வேதம் கூறும் அறிவுரையை ஏற்று இப்பொழுதே செயல்படுவீர் (2 கொளரி 6:2

J.C. சோட்

28ம்-பக்கத் தொடர்ச்சி

இருட்டடிப்புச் செய்து தங்களை மேன்மைபடுத்திக் கொண்டு அலைகிறோம். கிறிஸ்தவ மார்க்கத்தின் 'விடிவெள்ளி' மார்ட்டின் லூதருக்கு முற்பட்ட காலத்தை 'இருண்ட காலம்' என்று வேத அறிஞர்கள் வர்ணிப்பர். ஆனால் இன்று அதைவிட மோசமான 'பேயாட்சி காலம்' என்றால் கூட மிகையாகாது, 'மனுஷகுமாரன்' வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ? என்கிற இயேசுவின் ஐயப்பாட்டை உறுதிசெய்வது போன்ற செயல்கள் நாளுக்குநாள் பெருகிவருகின்றது. லூக் 18-8.

**இந்த அவலநிலை மாற என்ன செய்யலாம்?**

மேற்குறிப்பிட்டுள்ள கொடுமைகளை முன்னொரு காலத்தில் கண்டும் கேட்டும் மனம் வருந்தின நீதிமானாகிய லோத்தைப் போல் வேதனையால் தவிக்கிற பரிசுத்தவான்கள் அனைவரையும் ஓர் அணியாகத் திரட்டிக் கள்ள போதகங்கள் தமிழ் மண்ணில் வேரூன்றித் தழைத்து வளராதபடிக்கு தடுத்து நிறுத்தவதற்கான நல்ல உள்ளங்கள் ஒன்று கூடி ஜெபிக்கலாம்.

தவறான போதகங்களின் ஊற்றுக்கண்களை அடைத்து முதலாம் நூற்றாண்டின் நடைமுறையில் இருந்த தூய கிறிஸ்தவத்தைமீட்டு அமைக்கும் வகையில் மாந்த அறிவால் கறைபடாத புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவத்தைப் பறைசாற்றலாம்.

பட்டி, தொட்டிகள், சிற்றூர், பேரூர், நகரங்கள் தோறும் சிந்திக்க விரும்புகிற இளைஞர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோரை ஒன்று திரட்டி, வேத முகாம்கள் நடத்தி திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலாகிய (1 பேதுரு 2:3) புதிய ஏற்பாடு உபதேசங்களைக் கற்பிக்கலாம் (அப் 17:11) நற்செய்திப் பேருரைகள் நிகழ்த்தலாம்.

கிறிஸ்து இயேசுவின் அருள் நெறிகளை விளக்கும் நூல்கள், வார இதழ்கள், சிற்றறிக்கை ஆகியவைகளை அச்சிட்டு வழங்கலாம்.

உண்மைக் கிறிஸ்துவம் தழைத்தோங்க வேண்டும் என்று விம்பும் சான்றோர்களே! தடம்புரண்டு கிடக்கும் சத்தியமார்க்கத்தை மீட்டு அமைக்கும் அவசர தேவையை உணர்ந்து செயல் பட அனைவரையும் வாரீர்! வாரீர்! என்று கரம் கூப்பி அழைக்கிறோம்.

E. Z. செல்வநாயகம்

# சபையில் பெண்கள் ஆற்ற வேண்டிய பணிகள் எத்தகையது?

பெண்கள் சபையில் பேசக் கூடாது, ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தக் கூடாது, அடக்கமாக இருந்து அமைதியோடு கற்றுக் கொள்ள வேண்டும். என்றெல்லாம் வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. (1 தீமோ 2:11, 12) அதை அப்படியே ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவின் சபையில் செயல்படுகிறபடியால், கிறிஸ்துவின் சபை-யை பெண்களுக்கு சபை நடவடிக்கைகளில் அதிக பங்கு இல்லை. வெறுமனே ஆராதனைக்குச் சென்று அமர்ந்திருந்து விட்டு வந்தால் போதும்; அதற்குமேல் நமக்கு வேலையில்லை என்று சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர் அது உண்மையல்ல.

வாரத்தில் மூன்று, மிஞ்சிபோனால் நான்கு முறைதான் சபையாகக் கூடி வருகிறோம்; அதுவும் சில மணி நேரங்கள் தான். அந்தச் சந்தர்ப்பங்களில் மேடையேறி, சாட்சிசொல்லுகிறேன் என்ற சாக்கில் கதை அளப்பதும் ஆவேசமாக கத்திப் பிரசங்கம் செய்வதும் தான் தெய்வபணி' என்ற நினைப்பு தவறானது. அது போக வாரத்தில் மீதியுள்ள நேரம் பல மடங்கு அதிகம். அதில் பெண்கள் செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றனவே அதைப் பயன்படுத்தி சபையைக் கூட்டலாமே!

கிராமப் புறங்களில் தானியத்தைப் போரடிக்க மாடுகளை பயன் படுத்துவார்கள், எதிரும் புதிருமாக நான்கு ஐந்து மாடு-களை தாம்பு கட்டி ஓட்டுவார்கள். அவைகள் தானியத்தை நன்றாக மிதிப்பதினால் அவைகள் நசுக்கப்பட்டு தானியங்கள் கதிரிலிருந்து விடுபடும். அந்த மாடுகளில் இளம் காளைகளை வெளிப்புறமாகவும், கொஞ்சம் வயதானவைகளை உள்தாம்பிலும் பிணைத்திருப்பார்கள். வெளிப்புறமாக உள்ள மாடுகள் வேகமாக ஓட்டப்படும். ஆனால் உள்ளான்தாம்பு மாடு அதிகமாக ஓட வேண்டியதில்லை. சிறு விட்டத்துக்குள் சுழன்று சுழன்று வரும். ஆனால் அதன் பொறுப்பு மிகுதி. ஓரங்களில் மிதிபடாமல் கிடக்கிற கதிர்களையெல்லாம் வாரி உள்ளே வீசுவார்கள். அங்கே அவைகள் நன்றாய் மிதிபடும்.

அது போலத்தான் சபையில் பெண்களுடைய பணி ஆர்பாட்டம் தெரியாமல் அமைதியாய்ச் செய்யும் அவைகள் சபை அபிவிருத்திக்குப் பெரிதும் பயன்படும். உண்மையைச் சொல்லப் போனால் ஆராதனை என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற சிலாக்கியம். அது கடமையல்ல. நாம் தேவனைத்

துதிப்பதற்கும். கணப்படுத்துவதற்கும், அதன் மூலமாக ஆவிக்குரிய பலத்தைப் பெறுவதற்கும் வேதத்தைக் கற்பதற்கும், ஐக்கியம் கொள்வதற்கும் உரிய கர்த்தருடைய நாள். வாரத்தின் மற்ற நாட்களில் தான் நம்முடைய பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

ஆதித் திருச்சபைகளில்பெண்கள் எந்தெந்த வகையில் தங்கள் பங்கினை நிறைவேற்றினார்கள் என்று வேதத்தைத் திறந்து பார்ப்போம் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்துப் பெண்களாகிய எபோதிக் கோயிலையும், சிந்தி கோயிலையும் பற்றிக் கூறும்போது.. ''சுவிசேஷ விஷயத்தில் என்னோட கூட மிகவும் பிரயாசைப்பட்டார்கள் நற்சான்றிதழ் வழங்குகிறார். (பிலி 4;3) கெங்கிரேயா ஊர்ச் சபைக்கு ஊழியக்காரியாக சகோதரி பெபேயாளைக் குறித்துச் சொல்லும்போது.. அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள் என்று கூறுகிறார் (ரோமர் 16:1) அடுத்து ''கணவன் மனைவியாக ஆண்டவருடைய ஊழியத்தில் ஈடுபாடு கொண்ட பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாரையும் குறித்து அவர்கள் என் பிராணனைக் காப்பாற்றவேண்டி தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் என்று பாராட்டி நன்றி கூறுகிறார். (ரோமர் 16:4) அடுத்து எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள் என்கிறார் (ரோமர் 16:6)

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட லீதியாளின் விருந்தோம்பலைப் பற்றி அப் 16:15ல் வாசிக்கிறோம். அலெக்சாந்திரியா பட்டணத்தில் பிறந்த அப்பொல்லோ சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தபோதிலும் அவனுக்கு தேவனுடைய வசனங்களை அதிகத் திட்டமாய்ப் போதிப்பதில் தன் கணவனுக்கு பிரிஸ்கில்லா துணை நின்றாள் என்று பார்க்கிறோம். (அப் 18:26)

மேலும் அப் 9:39)ல் தொற்காள் என்ற பெண்மணி தன் பகுதியில் வாழ்ந்த ஏழை விதவைகளுக்கு ஆடைகள் கொடுத்து ஆதரித்தாள் என்று வாசிக்கிறோம் தீத்து 2:3:4ல் வயதான தாய்மார்கள் இளம் பெண்களுக்கு நல்லொழுக்கங்களைக் கற்பிக்க வேண்டும் என்றும் யூனிக்கேயாளும், லோவிசாளும் தீமோதேயுவின் இளமைப் பருவத்தில் அவளுக்குச் சத்தியத்தைத் தெளிவாக போதித்தார்கள் எனினும் வாசிக்கிறோம் (2 தீமோ 1:5)

இயேசு கிறிஸ்து கலிலேயாவில் ஊழியம் செய்த நாட்களில் அவருக்குப் பின்சென்று ஊழியம் செய்துவந்த மகதலேனா மரியர், சின்ன யாக்கோபும், யோசேக்கும், தாயாகிய மரியாள் சலோமே என்பவர்களைப் பற்றி மாற் 43:41ல் வாசிக்கிறோம். இப்படி-முதலாம் நூற்றாண்டில் பெண்கள் கர்த்தருடைய ஊழியங்கள் பலவற்றில் ஈடுபாடுள்ளவர்களாக இருந்தார்கள் என்றும் அவர்

களில் ஒருவரும் மேடையேறி முழங்கவில்லை என்பதையும் கவனி யுங்கள் கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி என்றிருப்பதை சிலர் தவறுதலாக பிரசங்கியாக இருந்தாள் என்று வியாக்கியானம் செய்கின்றனர். அங்கே ஊழியக்காரி என்பதற்கு சபையின் பணிப் பெண் என்று பொருள். (ஆங்கில மூலமொழி வேதாகமங்களைப் பார்க்க). நாமும் அவர்களுடைய முன் மாதிரிகளைப் பின்பற்றி கர்த்தருடைய காரியங்களில் ஈடுபாடு கொண்டு அவருக்குப் பிரிய மான முறையில் செயல்படுவோமாக! அப்படி ஈடுபாடு கொள்ள விரும்புபவர்களுக்கு இதோ சில ஆலோசனைகள் :

1. முதலாவது நீங்களும் உங்கள் முழுக் குடும்பமும் ஆராதனை கூட்டங்கள் அனைத்திலும் பங்கு கொள்ளுங்கள்.
2. வீடுகளில் பிள்ளைகளுக்கு வேதம் வாசிக்கவும், தியானிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக் கொடுங்கள்.
3. பெண்களுக்கான வேத ஆராய்ச்சி வகுப்பிலும், ஞாயிறுபள்ளி களிலும் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ளுங்கள் - கற்றுக் கொடுங்கள்.
4. கர்த்தருடைய பந்தியை ஆயத்தம் செய்வதற்கும், இருக்கை களை ஒழுங்குபடுத்துவதற்கும், ஆராதனைக் கூடத்தைச் சுத்தம் செய்வதற்கும், ஆராதனை தொடங்கும் முன்னரே வந்து உதவி செய்யுங்கள்.
5. ஆராதனை முடிந்தபிறகு பாய்களைச் சுருட்டிவைப்பது நாற் காலிகளை மடக்கி வைப்பது கழுவுவது கூட்டுவது போன்ற பணிகளைச் செய்து முடித்தபிறகு வீட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள்.
6. பெண்கள் ஐக்கிய சங்கம் அமைத்து வேதத்தைக் கற்றுத் தேறவும், வேறு நல நற்பணிகளையும் செய்யப் பிரயாசப் படுங்கள்.
7. நோய்வாய்ப்பட்டிருக்கிற சகோதர சகோதரிகளைச் சந்தித்து ஆறுதல் கூறி ஜெபியுங்கள் தேவைப்பட்டால் உணவு மற்றும் பொருளுதவி செய்யுங்கள்.
8. சபை கூடும் இடத்தை மாதம் ஒருமுறையோ அல்லது தேவை என்று நினைக்கிறபொழுது கழுவி சுத்தம் செய்யலாம்.
9. சபை அவ்வப்போது ஏற்பாடு செய்யும் ஐக்கிய விருந்துகளில் மற்றவர்களோடு சேர்ந்து நீங்களும் உணவு தயாரிக்கும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளலாம்! உதவி செய்யலாம்,
10. சபை அங்கத்தினர்களையும் அண்டை வீட்டாரையும் தெரிந்த வர்களையும் அவ்வப்பொழுது உங்கள் வீட்டிற்கு தேநீர்

விருந்துக்கு அழைத்து அவர்களோடு சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ளலாம்.

11. சத்தியத்தில் ஆர்வமுள்ள குடும்பங்களைச் சந்திக்கும்பொழுது, உங்கள் கணவரையும் துணைக்கு அழைத்துக் கொள்ளலாம்.

12 உங்கள் அண்டை வீட்டாரின் தேவைகளைத் தெரிந்துவைத்துக் கொண்டு, சந்தர்ப்பம் நேரும்போது முடிந்த உதவிகளைச் செய்வதின்மூலம் சிறிஸ்துவின் அன்பை உணரச் செய்யலாம்.

சகோதரிகளே ! சபையில் சரிபாதியாயிருக்கிற நாம் ஒருமைப்பட்டு முயன்றால் சபை வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதோடு நம்முடைய விசுவாசத்தையும் பெருக்கிக் கொள்ளலாம் செய்வோமா ?

**பெட்டி பர்ட்டன் சோட்**

## இங்கேயுமா? பாகுபாடு?

பொன்மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது

மினுக்குள்ள வஸ்திரந் தரித்தவனைக் கண்ணோக்கி நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும், நீங்கள் சொன்னால்

உங்களுக்குள்ளே பேதகம் பண்ணி, தகாத சிந்தனைகளோட நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?

# திரும்பிச் செல்வோம் வாரீர்!

''முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்கு
**கிறிஸ்தவர்கள்** என்கிற பேர் வழங்கிற்று''

—அப்போஸ்தலர் நடபடி 11:26

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சிறந்த வீட்டு பராமரிப்பு. என்ற அமெரிக்க நாட்டுப் பத்திரிகை, ''அமெரிக்காவில் மதம்'' என்னும் தலைப்பில் 16 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு கட்டுரையை வெளியிட்டது. வித்தியாசமான விநோதமான, மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் உருவாகிய. சிறிதும் பெரிதுமான 1200 பிரிவுகள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக்கூறுவதாக அக்கட்டுரை தெரிவித்தது.

மாறுபாடான பல போதனைகளை இன்று கேட்டு வரும் மக்கள் எதை நம்புவது எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எந்த சபை சரியானது அல்லது எல்லா சபைகளுமே ஒன்று தானா? நான் எந்த சபையில் அங்கம் வகிக்கவேண்டும்? .... என்ற வினாக்கள் எழுகின்றன. காளான்களைப் போல, பிரிவினை சபைகள் பெருகி பலுகி கிடக்கின்ற காரணத்தால் பலர் கிறிஸ்தவத்தையே வெறுத்து ஒதுக்கி விடுகின்றனர் அல்லது ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கிறிஸ்தவத்தின் வல்லமையும், உலகத்தில் ஒழுக்கமான வாழ்க்கைக்கு அதன் அவசியமும் இன்றைய பிரிவினை சபைகளின் தோற்றத்தால் கவலைக்கிடமான நிலையில் மறைந்து மங்கி வருகின்றன. இந்த பிரிவினைகளின் விலையோ மிக மிக அதிகம், பொறாமை சந்தேகப்பார்வை, பிரிவுகளுக்கிடையே பரஸ்பர வெறுப்பு, இவற்றிற்கெல்லாம் மேலாக, பிரிவினை சபைகளின் குழப்பமான போதனைகள் லட்சக்கணக்கான மக்களை கிறிஸ்துவின் அருகில் வரவிடாமல் ஓட வைத்துள்ளன.

இந்த நிலை, இதுவரை பலர் கேட்டிராத கேள்விகளைக் கேட்கத் தூண்டுகிறது. இயேசு கிறிஸ்து கட்டிய ஒரே சபையில் மட்டுமே நாம் அங்கம் வகிக்க முடியாதா? அதாவது, பிரிவினை சபைகளின் பாரம்பரிய கொள்கைகளில் சிக்கித் தவிக்காமல், இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டுமே பின்பற்றிச் செல்ல இயலாதா? பெயருக்கு மட்டும் கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ளுவது தேவையா? பிரிவினையற்ற கிறிஸ்தவம் அடைய முடியாத ஒன்றா? அல்லது, கிறிஸ்துவின் ஒரே சபை என்பது நடைமுறைக்கு வராத கனவா? என்பவைகள் அவைகளில் சில.

மத உலகிலே இன்று தென்படுகிற பிரிவினை சபைகளின் வரலாறுகளை, சிறிது பின் நோக்கிப் பார்க்க வேண்டிய தருணம் இதோ வந்து விட்டது. இந்த சபைகள் எல்லாம் எங்கிருந்து, எப்பொழுது யாரால் ஏன் வந்தன? இவ்வளவு மோசமாக நாம் பிரிந்து கிடப்பது எப்படி? தேவனுக்கு இந்நிலை மகிழ்ச்சி தரக் கூடியதா? புற மதஸ்தர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? கிறிஸ்துவை பின்பற்றுவோர் எல்லாரும் ஒன்றுபட்டு ஒரே சபையாக இயங்க வழியே கிடையாதா? எல்லாவற்றிற்கும் மேலாக பிரிவினை லேபிள் எதுவும் இல்லாத ''கிறிஸ்தவனாக'' மட்டுமே இருப்பது எப்படி? இக்கேள்விகளுக்கெல்லாம் இங்கு விடை காணப்போகிறோம்.

**புதிய ஏற்பாட்டு காலத்தில் ஒரே ஒரு சபை மட்டுமே இருந்தது.**

புதிய ஏற்பாட்டு நிலை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், எபேசியர் 4:4-6 வசனங்களில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

> ''உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே **சரீரமும்**, ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானம், எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும் உங்கள் எல்லோர்க்குள்ளும் இருக்கிறவர்.'

ஒரே சரீரம் என பவுல் இங்கு குறிப்பிடுவது சபையை நினைவில் கொண்டு தான் என்பதை, அடுத்து எபேசியருக்கு எழுதிய நிருபம் 1:22 23 வசனங்களில் காணலாம். அதாவது,

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய **சரீரமான சபைக்கு** அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' அந்த சரீரமாகிய ஒரே சபையில் உள்ள அங்கத்தினர்கள் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கப்பட்டனர் என்பதை அப்போஸ்தலர் நடபடி 11-26ம் வசனத்தில் காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் விருப்பம், எல்லா மக்களும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதே. தன்னுடைய சபையைக் கட்டுவதாக அவர் கூறிய போது, ஒரே சபையைத் தான் கூறினார். மத்தேயு 16:18ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சபையை என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மேலும், இயேசு கிறிஸ்து சபையை தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி

சம்பாதித்துக் கொண்டார் என அப்போஸ்தலர் நடபடி 20:38-ல் கூறப்பட்டுள்ளது. மகிமையுள்ள சபையாக அதை நமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே அதற்கு ஒப்புக்கொடுத் தார் என எபேசியர் 5:26,27 வசனங்களில் காணலாம். பவுல் ரோமாபுரியிலுள்ள சபையாருக்கு எழுதுகிறபொழுது 'கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்' என ரோமர் 16:16—ல் கூறியுள்ளார். எனவே கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார் அது **கிறிஸ்துவின் சபை** என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அவருடைய சீடர்களின் ஒற்றுமைக்காகவும், அவருடைய உப தேசங்களை ஏற்றுக்கொள்கிறவர்கள் எல்லோரும் ஒன்றாக இருக் கும்படியாகவும் இயேசு கெத்செமென தோட்டத்தில் மனதுருகி ஜெபித்தார். யோவான் 17,20,21ம் வசனங்களைப் பாருங்கள்; **''அவர்களெல்லோரும் ஒன்றாபிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லோரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண் டிக்கொள்ளுகிறேன்''** என ஜெபித்தார். எபேசியர் 2:13-16 வசனங்களிலும் ஒரே சரீரமாகிய சபையைப் பற்றி பவுல் குறிப் பிடுகிறார்.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு,புதிய ஏற்பாட்டை எழுதிய எல்லோருமே பிரிவினையை கடுமையாகக் கண்டித்திருக்கின்றனர். 1 கொரிந்தியர் 1:10ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். ''சகோதரர் களே நீங்களெல்லோரும் ஒரே காரியத்தை பேசவும், பிரிவினைகளி ல்லாமல் ஏக மனதம், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்கு புத்தி சொல்லு- கிறேன்.'' கலாத்தியர் 5:20ம் வசனத்தில், பிரிவினையானது மாம் சத்தின் கிரியை என தேவனின் வார்த்தை கண்டிக்கிறது. 2பேதுரு 21:ம் வசனத்தில், கேட்டுக் கேதுதான வேதபுரட்டுகளை, தந்திர மாய் நுழையப்பண்ணி தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்ட வரை மறுதலித்து, தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளும் கள்ளத் தீர்க்கத்தரிசிகளை பற்றிக் குறிப்பிடுகிறார்.

1. புதிய ஏற்பாட்டின்படி, சபை ஒன்றே என்பது தெளிவாகத் தெரிவதால் எல்லா பிரிவினை சபைகளும் கண்டிக்கத்தக்கவை.

2, எல்லா 'சபைகளும்' ஒன்றே என்ற கூற்று தவறானது.

3. ''விருப்பமான ஏதாவது ஒரு சபைக்குப் போகலாம்'' என ஒருவர் சொல்வது, ஒன்று தவறான போதனையின் விளைவாக இருக்கலாம் அல்லது அவர் தேவனின் விருப்பத்தைப் பற்றி சிறிதும் கவலையற்ற நபராக இருக்கலாம்.

4. உண்மையான சபை ஒன்றே என்பது உறுதியான பின், மற்ற சபைப் பிரிவுகள் எல்லாம் போலிகள் என்பது சிந்திக்க விரும்கிற ஒருவருக்கு விளங்காமற் போகாது.

5. புதிய ஏற்பாட்டு சபை ஒன்றே என்பதால், இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரம் உள்ள எல்லோரும் அதில் தானே அங்கம் வகிக்க வேண்டும்?

எவ்வித விரோத மனப்பான்மையோ, அல்லது வெறுப்பு உணர்வோ இன்றி, உங்கள் பேரில் அன்பும் அக்கரையும் கொண்டு, புதிய ஏற்பாட்டில் காணப்படும் சபையைப் பற்றி நான் கூறுவதை, தயவுசெய்து வேதாகமத்துடன் ஒத்துப் பார்த்து சரியாக இருப்பின் ஏற்றுக்கொள்ளுங்கள், (அப் 17:11,) அது பிரிவினையற்ற கிறிஸ்துவை நடு நாயகராகக் கொண்ட தேவனின் அநாதித் தீர்மானங்களின் நிறைவேற்றலாக ஒரே சிந்தையாய் ஆணும் பெண்ணும் சகோதரத்துவ பாசத்தில் இணைந்த ஒரு அற்புதமான தெய்வீக அமைப்பு என்பதை நீங்கள் காண முடியும்.

## பிரிவினை சபைகள் வளர்ந்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

இன்றைய மதப்பிரிவினைகள் வேர் விட்டு வளரத்தொடங்கிய காலத்தை, வரலாற்று ஆசிரியர்கள் **பெரும் வீழ்ச்சியின் காலம்**, அல்லது **இருண்ட காலம்** என குறிப்பிடுகின்றார். புதிய ஏற்பாடு காலத்திலேயே, சபையை துண்டாட சிலர் முயன்றனர். இதை பவுல் வன்மையாகக் கண்டித்து உணர்த்தினளர். (1கொரி 1:10-17), அப்போஸ்தலர்களும், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும், இதை கண்டித்துள்ளனர்' கலாத்தியர் 1:6-9 வசனங்களிலும், 2 பேதுரு 2:1ம் வசனத்திலும் எச்சரித்துள்ளனர். 2 தீமோத்தேயு 2:18-ம் வசன இறுதியில், அப்போஸ்தலர் பவுல் மீண்டுமாக எச்சரித்துள்ளார்

''......இவர்கள் உண்மையைவிட்டு விலகி சிலருடைய விசுவாசத்தையே தகர்த்து விடுகிறார்கள். தொடர்ந்து 2திமோத்தேயு 4:3,4 வசனங்களில் கூறுகிறார்: ''ஒரு காலம் வரும், அப்போது மக்கள் நலமிக்க போதனையைத் தாங்க மாட்டார்கள். மாறாக செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் மனம் போன போக்கிலே எண்ணிறந்த போதகர்களைத் திரட்டிக் கொள்வர்.

உண்மைக்குச் செவி கொடுக்க மறுத்து. கட்டுக் கதைகளுக்கு செவி கொடுப்பர்''. (திருத்திய மொழி பெயர்ப்பு)

எபேசுவிலுள்ள புதிய ஏற்பாட்டு சபையை எச்சரித்து, அப்போஸ்தலர் நடபடி 20:20-30 வசனங்களில் பவுல் கூறுகிறார் ''நான் போனபின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீடர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்''.

மாறுபாடான போதனைகளும், வீழ்ச்சியும், பவுல் கூறியவாறு ,கி.பி. 100 முதல் 300 வரையிலான கால கட்டத்தில் தோன்றி, புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை சிறிது சிறிதாக மங்கச் செய்து விட்டன. மாறுபாடான போதனைகள் தந்திரமாக ஒவ்வொரு கட்டத்திலும் புகுத்தப்பட்டு வந்தன.

1. புதிய ஏற்பாட்டுக் கால எளிய சுதந்திரமான, சபை **நிர்வாக முறை** கொஞ்சம் கொஞ்சமாக, பிஷப், ஆர்ச்பிஷப், என்றும் கடைசியாக 7 வது நூற்றாண்டு துவக்கமுதல் ''போப்'' என்று மனிதனால் உருவாக்கப்பட்ட பதவிகளால் மாற்றப்பட்டு இறுதியில் பறித்துக் கொள்ளப்பட்டன.
2. மனிதனுடைய பாரம்பரியங்கள், தேவனின் வார்த்தைக்கு மேலாக மதிக்கப்பட்டு, மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் புகுத்தப்பட்டன.
3. புதிய ஏற்பாட்டு சபையின் எளிய வழிபாட்டு முறைகள் மாற்றப்பட்டு மனிதன் ஏற்படுத்திய சடங்குகளுடன் இலத்தீன் மொழியில் பூசை (MASS), என்ற பெயரில் விக்கிரகங்களை வணங்குதல், ஆராதனையில் வாத்திய இசைக்கருவிகள் போன்றவைகள் இடம் பெற்றன.
4. ஜென்ம பாவம் என்ற ஒரு கொள்கையை உருவாக்கி, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற புதுமுறை புகுத்தப்பட்டு தண்ணீரைத் தெளித்து, சபை அங்கத்தினர்களாக்கும் முறையில் தவறான மாற்றம் செய்யப்பட்டது.
5. போதகர்கள் தங்களை 'சங்கைக்குரிய'' அதி சங்கைக்குரிய'' என்றெல்லாம் அடைமொழிகளை சேர்த்து பெருமையுடன் அழைத்துக் கொண்டதுடன், சபை அங்கத்தினர்களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக்காட்டும் ஆடைகளையும் அணிந்து கொண்டனர்.

படிப்படியாக நடைபெற்று வந்த இந்த மாபெரும் வீழ்ச்சியை ஆண்டுவாரியாகக் கீழே காணலாம்.

கி.பி. 150-ல் தலைமை பிஷப் தோன்றினார்.

கி.பி. 251-ல் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் அறிமுகம்;

கி.பி. 405-ல் விக்கிரக வழிபாடு புகுத்தப்பட்டது;

கி.பி. 607-ல் முதல் போப் ஏற்படுத்தப்பட்டார்.

அதாவது, ரோமன் கத்தோலிக்க மதம் தோன்றியது. அவர்கள் முதலாம் நூற்றாண்டில் மரித்த, இராயப்பர் என கத்தோலிக்கர்களால் அழைக்கப்படும் பேதுருவை முதலாவது போப் என சொல்வது எவ்வளவு பெரிய சரித்திர மோசடி என்பதைக் காணலாம், 'போப்' திருமணம் செய்து கொள்வது கூடாது என்று போதிக்கும் இவர்கள் திருமணமாகி குடும்பம் நடத்திய பேதுருவை "முதலாவது போப்" என்று கூறிக் கொள்வது எப்படி? (மத் 8:14, மாற்கு 1-30 லூக் 4:38; 1 கொரி9:5)

கி.பி. 666 ல் ஆராதனையில் வாத்தியக் கருவிகளை அறிமுகம் செய்தனர்;

6. கி. பி. 800-ல் சபையும் (அதாவது கத்தோலிக்க சபையும்) அரசும் இணைந்து வேதத்துக்குப் புறம்பாக செயல்பட்டன. மதத்தின் பெயரால் இவர்கள் நடத்திய கொடுங்கோலாட்சியையும் செய்த பித்தலாட்டங்களையும் அம்பலப்படுத்தி, புதிய ஏற்பாட்டு நடைமுறைகளுக்குத் திரும்பும் அவசியம் பற்றி மக்கள்மன்றத்தில் தைரியமாக எடுத்துரைத்த பலர் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

7. கி. பி. 1054-ல் கிரீக். ரோமன் சபைகள் என்று கத்தோலிக்க மார்க்கத்தார்களிடையே பிளவு ஏற்பட்டு பிரிந்தனர்.

அடுத்து வந்த நூற்றாண்டுகளில் மேலும் பிரிவுகள் ஏற்பட்டு மாறுபாடான வழிபாட்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கிறிஸ்தவம் வீழ்ச்சியடைந்து, உலக காரியங்களும் ஊழல்களும் மலிந்த மதஅமைப்புகள் தோன்றலாயின.

சாத்தான் தனது (தற்காலிக) வெற்றியைக் கண்டு குதித்து கூத்தாடி இருப்பான்!

16 ஆம் நூற்றாண்டில், மேற்சொன்ன கேடுகளைக் களைந். தெரிந்து, புதிய ஏற்பாட்டு சபைக்கு மீண்டும் செல்ல ஜான்வை- கிளிப், ஜான்ஹஸ், ஜெரோம் போன்றோர் கிளர்ந்தெழுந்தனர். மதமும் அரசும் இணைந்து வலிமை மிக்க சக்தியாக இயங்கிய அந்த காலகட்டத்தில், 'ஆதிசபையின் ஒழுங்குகளிலிருந்து பிரிந்து எங்கோ

வந்துவிட்ட நாம், மீண்டுமாக திரும்பிச் செல்லுவோம்'' எனக் குரல் எழுப்பி அறைகூவல் விட்ட, மேற்சொன்ன கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியர்கள், அந்தோ! தங்கள் உயிரையே இழக்க-வேண்டி வந்தது.

பிற்காலத்தில் தோன்றிய **மார்ட்டின் லூதர்**, ''மதத் தலை-வர்களின் தடைகள் இன்றி, எல்லோரும் பரிசுத்த வேதாகமத்தைப் படித்து, அதன்வழி நடக்க வேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

அவரை தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக, மாறுபாடான மனிதக் கோட்பாடுகளால் அமுங்கிக் கிடந்த புதிய ஏற்பாட்டுச் சபைக்கு, மீண்டுமாக உயிர்கொடுக்க ஒரு இயக்கம் தோன்றிற்று. இவ்வியக்கத்தில் **உல்ரிச் ஸ்விங்லி ஜான்கால்வின், ஜான், நாக்ஸ்** போன்றோர் தீவிரப் பங்கேற்றனர். இவர்களுக்குப் பின் தோன்றிய **ஜான்வெஸ்லி**, மனிதர்கள் கடைபிடித்து வந்த உயி-ரற்ற சடங்குகளை மாற்றி, புதிய ஏற்பாட்டு சபைக்கு உயிரூட்ட முயன்றார்.

இவர்கள் எல்லோருமே மரியாதைக்குரிய பெரிய மனிதர்கள். நாம் இவர்களுக்கு மிகவும் கடன்பட்டுள்ளோம். இருண்ட காலத்தில் ஒளியேற்ற பாடுபட்ட இவர்களை நாம் வாழ்த்துகிறோம்! ஆனால் பரிதாபம்! காலத்தின் கட்டாயத்தாலும் சூழ்நிலையாலும் இதற்கு மேல் இவர்களால் செல்ல முடியவில்லை. காலப்போக்கில் மீண்டும் புதிய புதிய சபை பிரிவுகள் உருவாக இந்த நல்ல மனிதர்களின் பெயர்களே பயன் படுத்தப்பட்டன என்பதுதான் வேதனையைத் தருகிறது. இவர்களில் எவருமே புதிய பிரிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பத்தில் இயங்கவில்லை. பிரிவினை சபைக்கு உதவும் எண்ணமும் இவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் துரதிஷ்டமாக இவர்களுடைய மரணத்துக்குப் பிறகு இவர்களுக்கு மரியாதை செலுத்துகிறதாக நினைத்துக் கொண்டு இவர்களுடைய ஆதரவாளர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதை விட்டு விட்டு, மேலே குறிப்பிட்ட மனிதர்களை பின்பற்றலாயினர். இப்படியாக புதுப்புது பிரிவு சபைகள் தோன்றலாயின. **மார்ட்டின் லூதரைப்** பின்பற்றியவர்கள் **லூதரன் சபை** என்றும். **கால்வின்** கருத்துக்களால் கவரப்பட்டவர்கள். **பாப்டிஸ்ட் சபை** என்றும், **ஜான்நாகஸ்** வழியாக **பிரஸ்பிடேரியன் சபையும், ஜான் வெஸ்லியின்** ஆதரவாளர்கள் **மெதடிஸ்ட் சபை** எனவும், இங்கிலாந்து நாட்டில் இவ்வியக்கம் **ஆங்கில சபை** என்றும் பல பிரிவுகளாக பிரிந்தன.

காலம் செல்லச் செல்ல இப்பிரிவுகளில் உட்பிரிவுகள் பல முளைத்து அவைகளிலும் பிளவுகள் ஏற்பட்டு. இன்றைய தினம்

அமெரிக்காவில் மட்டும் 1200 பிரிவுகள் உள்ளன. இந்தியாவிலும் உலகமெங்கிலும் எண்ணிலடங்கா பிரிவு (அல்லது பிளவு) சபைகள் உள்ளன. இவ்வாறாக ஆதிசபையை உயிர்ப்பிக்கும் இயக்கம் ஸ்தம்பித்துப் போனது மட்டுமில்லாமல் கிறிஸ்தவம் பல கூறுகளாக, சிதைந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் முரண்பாடாகச் செயல்பட ஆரம்பித்தன. சாத்தான் மீண்டுமாக தன் எக்காளச் சிரிப்பில் மிதந்திருப்பான் !

மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சபை பிரிவுகளுக்கிடையே வெடித்த பொறாமை, வெறுப்பு, அடிதடி, சட்டப் பிரச்சனை-களின் விளைவாகத் தோன்றிய ஏமாற்றத்தின் உச்ச கட்டத்தில், கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் அமெரிக்காவில் ஒரு மாபெரும் மறு மலர்ச்சி இயக்கம் உதயமாயிற்று.

சபை பிரிவுகளை ஒழித்துக் கட்டும் மார்க்கம், என்பது மீண்டும் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்துவது அல்ல என்றும் மாறாக மனிதரால் உருவாக்கப்பட்டு, சபைகள் என்ற பெயரில் இயங்கும் அமைப்புகள் அனைத்தையும் முற்றிலும் புறக்கணித்து விட்டு, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்புவது தான் ஒரே சரியான வழி என இந்த இயக்கம் ஏற்றுக்கொண்டு, **முதலாம் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டு சபையின்** சகல மகிமைகளையும், பூரணமான பரி-சுத்தத்தையும் மீண்டும் கொண்டுவரப் பாடுபட்டனர். இவ்வியக்கம் எல்லைப்பகுதிகளான விர்ஜினியா, கெண்டுக்கி, ஒகியோ, பென்ஸில்வேனியா போன்ற இடங்களில் விரைவாகப்பரவிற்று.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை அதாவது **கிறிஸ்துவின் சபையை** மீண்டும் ஏற்படுத்தும் பணியில் பல பிரிவு சபைகளின் தலைவர்களும் தங்கள் தங்கள் பிரிவுகளை உதறிவிட்டு, உற்சாக மாகப் பங்கேற்றனர்.

இதுவரை ஆணவச் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்த நமது "நண்பன்" சாத்தான் இவ்வியக்கத்தின் வலிமைகண்டு தொடை நடுங்கிப் போயிருப்பான்.

வட கரோலினாவில் **மெதடிஸ்ட்** சபையின் புகழ் பெற்ற ஊழியராய் இருந்த **ஜேம்ஸ், ஓ கெல்லி** என்பவர், 1793-ல் மெதடிஸ்ட் சபையை உதறித் தள்ளிவிட்டு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைக் கொண்டுவர உழைத்தார். இவருடைய முயற்-சியால் 5000 பேருக்கும் அதிகமான சகோதரர்கள் தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கவும், **புதியஏற்பாட்டு உபதேசச் சட்டங்களை** மட்டுமே தங்கள் சபையின் சட்ட திட்டமாகவும் ஏற்றுக்கொண்டனர்.

1801-ம் ஆண்டு துவக்கத்தில், புதிய இங்கிலாந்தில் **எலியாஸ்மித், அப்னார் ஜோன்ஸ்** என்ற இரு பாப்டிஸ்ட் போதகர்கள் தங்கள் பிரிவினை சபையை உதறிவிட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சபைக்காக வேலை செய்யத் தொடங்கினார்கள்.

கென்டுக்கி மாநிலத்தில், **பார்ட்டன் ஸ்டோன்** என்ற பிரஸ்பிட்டேரியன் போதகர், அதே சபையைச் சேர்ந்த மற்றும் சில போதகர்களுடன் இணைந்து **ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன்** சபையை விட்டு வெளியேறி, ''வேதாகமத்தை தவிர வேறு மனித சட்டதிட்டங்களோ, அல்லது கிறிஸ்தவன் என்ற பெயரைத் தவிர வேறு எந்த அடைமொழியுமோ நமக்குக் கூடாது'' என அறிவித்து, புதிய ஏற்பாட்டு சபையை மீண்டும் கொண்டுவரும் பணியில் தங்களை அர்ப்பணித்தார்கள்.

**ஸ்பிரிங்பீல்ட் பிர்ஸ்பிட்டேரியன்** சபையின் கடைசி உயில் என அவர்கள் வெளியிட்ட ஒரு பிரபலமான தஸ்தாவேஜு அறிவிப்பதைக் கேளுங்கள்:

''இந்த சபை (ஸ்பிரிங்பீல்டு பிரஸ்பிட்டேரியன்) மடிந்து போகவும், கலைக்கப்பட்டு. கிறிஸ்துவின் சபையிலே இணையவும் நாங்கள் தீர்மானிக்கிறோம். ஏனென்றால், நாம் ஒரே நம்பிக்கையில் அழைக்கப்பட்டிருப்பது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் தான் உண்டு. மோட்சம் செல்ல, தங்களின் ஒரே மார்க்கமாக மக்கள் இனி கிறிஸ்துவின் நற்செய்தியை (வேதாகமத்தை) மட்டுமே. ஏற்றுக் கொள்ள நாங்கள் தீர்மானிக்கிறோம். கிறிஸ்துவின் நற்செய்திக்குப் போட்டியாக முளைத்த இதர எல்லா மனித சட்டதிட்டங்களையும், விரும்பினால், தீயிலிட்டுக் கொளுத்துவோம். மனிதன் இயற்றிய பல மதச்சடங்குகள், சட்ட புத்தகங்கள் வழியாக நரகத்திற்கு செல்வதை விட்டு, ஒரே வேதாகமத்தை மட்டும் நமது இரட்சிப்புக்கு ஏற்றுக்கொள்வோம.''

இவ்வெழுச்சி காரணமாக விரைவிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் மனித சபை பிரிவுகளை உதறிவிட்டு, **பார்ட்டன்ஸ்டோன்** அவர்களைப் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

மறுமலர்ச்சி இயக்கத்தில் வெகு முக்கியமான நபர்கள் **தாமஸ் கேம்பல், அலெக்ஸாண்டர் கேம்பல்** ஆகிய இருவர்- இவர்கள் தகப்பனும் மகனும் ஆவர், அயர்லாந்து நாட்டிலிருந்து இவர்கள் 1807, 1809-ம் ஆண்டுகளில் குடிபெயர்ந்து அமெரிக்காவுக்கு வந்தனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப் பகுதி மிகப் பிரசித்திபெற்ற ஒன்றாகும். அதாவது: ''வேதாகமம் எதைப் பேசுகிறதோ அதை மட்டுமே பேசுவோம்; அது பேசாத எதையும் நாம் பேசமாட்டோம்''.

பிரஸ்பிட்டேரியன் சபை, பின்னர் பாப்டிஸ்ட் சபைகளில் அங்கம் வகித்த் இவ்விருவரும், சத்தியத்தை தேடி உணர்ந்தபின் மேற்சொன்ன சபைப்பிரிவுகளை உதறி தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் ஒரே சபையாகிய புதிய ஏற்பாட்டு சபையில் தங்களை இணைத்துக் கொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவர்களைப் பின்பற்றி கிறிஸ்துவின் சபையில் இணைய இவர்கள் காரணமாக இருந்தனர்.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், பல இடங்களிலும் தோன்றிய இந்த மறுமலர்ச்சி இயக்கம் 1832-ம் ஆண்டு துவக்கத்தில் ஒருங்கிணைந்து, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்பும் இயக்கமாக செயல்பட்டது.

1. ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்'' என 1 பேதுரு 4:11 ம் வசனத்தில் கூறியுள்ளபடி, கிறிஸ்துவில் நம்பிக்கையுடைய எல்லோரின் ஒற்றுமையை வலியுறுத்தினர்.
2. வேதாகமத்தை மட்டுமே சபையின் சட்ட புத்தகமாக வைத்துக் கொண்டு, மனிதன் உருவாக்கிய சகல சபை சட்டதிட்டங்களையும் புறக்கணித்தனர்.
3. வேதாகமத்தில் குறிப்பிட்ட பெயர்களை மட்டுமே சபைக்கு உபயோகித்து, உண்மை கிறிஸ்தவர்களாக செயல்பட உறுதி பூண்டனர்.
4. புதிய ஏற்பாட்டு சபையில் நடைமுறையிலிருந்த வழிபாட்டு முறைக்குத்திரும்பினர்.

புதிய ஏற்பாட்டு சபையில் தொடர்ந்து ஒரு ஒழுங்கு இருந்ததை ஏற்றுக்கொண்டு, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்துக்கு திரும்புவதில் கவனத்தையும் ஒழுங்கையும் கடைபிடித்தனர்.

**முன்னேற ஒரே வழி பின்னே செல்வது தான்;** அதாவது ஆதி சபையைப் போல இருப்பதுதான் என அவர்கள் நம்பினார்கள்.

இன்றும் நாம் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கமுடியும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம். வேதாகமத்தை மட்டுமே மூலமாக எடுத்துக் கொண்டு, சிதறிக்கிடக்கும் பிரிவினைக் கூட்டங்கள் தங்கள் கொள்கைகளை விட்டு ஒன்றுபட வேண்டுகிறோம். மதப் பிரிவினைகளை நோக்கி எங்கள் மன்றாட்டு இதோ-

தயவு செய்து உங்கள் நிலையை மறு பரிசீலனை செய்யுங்கள். உங்கள் நம்பிக்கை, பழக்க வழக்கங்களை மாற்றி வேதாகமம்

பேசும் இடத்தில் பேசுங்கள்; அது பேசாததை நீங்களும் பேசாதீர்கள்.

**அலெக்சாண்டர் காம்பெல்** அல்லது **பார்ட்டன் ஸ்டோன்** அல்லது **ஜான்வெஸ்லி** அல்லது **மார்ட்டின் லூதர்** அல்லது **கால்வின்** அல்லது எந்த மனிதனையாவது பின்பற்றுங்கள் என நாங்கள் சொல்லவில்லை. மாறாக, உங்களை வேண்டுவதெல்லாம் **கிறிஸ்துவிடம் திரும்புங்கள்! அவருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றுங்கள்! புதிய ஏற்பாட்டு சபையாகிய கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புங்கள்!** நமது பழக்கங்களிலும், நம்பிக்கையிலும் நாம் பிரிவினை சபையாக இருக்கக்கூடாது என்பதே எங்கள் ஜெபம்!

இது ஒன்று மட்டுமேதான் மத உலகில் ஒற்றுமைக்கான வழி அன்று இது சாத்தியமாயிற்று; அப்படியானால் இன்றும் அது சாத்தியமே.

கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளவர் எல்லோரும் ஆதிச்சபைகள் முதலாம் நூற்றாண்டில் நடந்ததைப் போல, கிறிஸ்துவின் வழியில் நடக்கவேண்டும் என்பதே எங்கள் வேண்டுதலும் ஜெபமுமாகும்.

முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இருந்தார்களோ, அதேபோல 20-ம் நூற்றாண்டிலும் நாம் இருக்க முடியும் அவர்கள் நம்பியதை நாம் நம்பினால்; அவர்கள் கீழ்ப்படிந்ததைப் போல நாமும் நடந்தால், கிறிஸ்துவின் சபையிலே நாம் அங்கம் வகிப்போம்.

நாம் முன்னேற, பின்னோக்கிச் செல்வோம் ...... ஆம் முதல் நூற்றாண்டு **கிறிஸ்துவின் சபையை** நோக்கி செல்வோம்.

இயேசு கிறிஸ்து கட்டிய சபை;- **கிறிஸ்வின் சபை** அதன் உறுப்பினர்கள் – **கிறிஸ்வர்கள்**. கிறிஸ்தவர்களின் ஒரே முழுமையான சட்ட நூல் 'எல்லா சூழ்நிலைகளுக்கும் போதுமான சட்ட நூல் **புதியஏற்பாடு**.

**ராபர்ட் ஜி. டாக்கரி**

**எஸ். எஸ். ராஜன்**

# கிறிஸ்துவத்திற்கு உடனடித் தேவை

## ஒற்றுமை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வழிபடும் நன்மக்களே!

கிறிஸ்தவ மார்க்கத்தின் நாயகர் இயேசு கிறிஸ்துவும் அவர் தம் திருத்தொண்டர்களில் முதன்மையானவருமாகிய அப்போஸ்தலன் பவுல் அடியாரும், கிறிஸ்தவ அறத்தில் பற்றும் உறுதிப்பாடும் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று மிகவும் உருக்கத்தோடு வலியுறுத்துகின்றனர். யோவான் 17:20-23 :1 கொரி 1;10-13; ரோமர் 15:5-6.

**ஏன் அப்படி வற்புறுத்துகிறார்கள்?**

அப்பொழுதுதான் பரம தந்தையாகிய தேவன் மாந்த குலத்தை அழிவிலிருந்து மீட்கும் பொருட்டு தம் ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விண்ணுலகிலிருந்து இவ்வுலகுக்கு அனுப்பினார். மற்றபடி இயேசு தானாகவே அந்நிலைக்கு தன்னை உயர்த்திக்கொள்ளவில்லை என உலக மக்கள் ஏற்றுக் கொண்டு நம்புவர் என்று இயேசு தமது நீண்ட ஜெபத்தில் கூறியிருக்கிறார். யோவான் 17,21 ;

**ஆனால் இன்று நாம் காண்பது என்ன?**

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் என்று வர்ணிக்கப்படும் சபை (கொலோ 1:18) பல கூறுகளாகப்பிரித்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் இருப்பதோடு நிற்காமல் முரண்பாடாகச் செயல்பட்டு நம்மால் 'அஞ்ஞானிகள்' என்று கருதப்படும் மற்ற சமயத்தவர்கள் நம்முடைய ஒற்றுமையின்மையைச் சுட்டிக்காட்டி இகழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் அஞ்சின காரியங்கள் மெய்ப்பிக்கப்பட்டு வருவதைக் கிறிஸ்தவத்தில் உண்மையான பற்றும், பாசமும் கொண்ட நன்மக்கள் கண்டும், கேட்டும் மனம் புழுங்கி வருந்துகின்றனர்.

இவைகள் போதாது என்பது போல் நாளொரு சனபயும் பொழுதொரு குழுக்களுமாக புதிய புதிய கூட்டங்கள் மழைக்காலத்துக் காளான்கள் போல முளைத்து, தங்களுக்குச் சாதகமான சில வசனங்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் வசப்படுத்தித் தாங்களே கேட்டுக்கு, அடிமைகளாக இருந்தும் பிறருக்குச் சுயாதீனத்தை வாக்குத் தத்தம் செய்தும் ஆசீர்வாதங்களை வாரிவழங்கியும் நமது இரட்சகரின் உடல்உறுப்புகளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கூறுபோட்டு ஏலம் விடுகிறார்கள்.

சரீர சுகமளிப்பு, மூட நம்பிக்கைகளுக்குத் தீனிபோடும் பில்லி, சூனியம், குறி சொல்லல், பிசாசு விரட்டல் போன்ற உளுத்துப்போன மாயாஜால வித்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தி, இயேசு பெருமானின் சிறந்த போதனைகளையும் சத்தான அருள்நெறிகளையும் பின்னுக்குத்தள்ளிவிட்டு கிறிஸ்து இயேசு இவ்வுலகுக்கு வந்த தலையாய நோக்கத்தை லூக் (19 :10)


12ம் பக்கம் பார்க்கவும்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridays-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## திருமறை ஆசான் அன்புடன் அழைக்கிறது

ஜெபியுங்கள் ! பங்கு கொள்ளுங்கள் !

நிகழ்வு : திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

நாள் : 23.5.1992 சனிக்கிழமை

நேரம் : காலை 9-30 மணிமுதல் மாலை 6 மணிவரை

இடம் : E.L.M. பெப்ரிஸியஸ் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கம், புரசைவாக்கம், சென்னை - 600007.

பொருள் : திருமறை வழியில் ஒற்றுமை

அனுமதி இலவசம் ! அனைவரும் வாரீர் !

பி.கு. வெளியூரிலிருந்து 22-5-92 வெள்ளி இரவில் வருபவர்களுக்கு பள்ளியிலேயே தங்க வசதி செய்யப் பட்டிருக்கிறது.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

TO

PRINTED MATTER

BOOK-POST

If undelivered please return to,
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.